<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

<u>அசல் வழக்கு எண். 87/2019</u>

**2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22–ம் நாள் வெள்ளிக் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :சையது ஹனீஃப் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | சையது காதர் சாயபு | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :வல்லாபுரம் | வயது | : 62/2025 |

**<u>முதல் விசாரணை :</u>**

(i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 12.03.1996ம் தேதியிட்டு எனது தகப்பனார் சையது காதர் சாயபு பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது தந்தையான சையது காதர் சாயபு பெயரிலுள்ள 1388ம் பசலி ஆண்டுக்கான பழைய சிட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 01.02.2010ம் தேதியிட்ட சின்னசாமி என்பவர் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)